www.padippakam.com

பத்திரிகை அறிக்கை :

# ஜெர்மனி ஸ்ருட்கார்ட் தீர்மானங்கள்

இலங்கை தேசிய இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வும், புலம்பெயர் வாழ் தமிழ்பேசும் மக்களினது பங்களிப்பும் தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கு 11, 12 நவம்பர் 2006 ஜேர்மன் ஸ்ருட்காட் நகரில் இலங்கையர் ஜனநாயக முன்னணியினரால் நடாத்தப்பட்டது. இக் கருத்தரங்கில் புலம்பெயர்நாடுகளில் இருந்து குறிப்பாக இங்கிலாந்து, நோர்வே, டென்மார்க், பிரான்ஸ் , சுவிஸ்லாந்து, கனடா, ஜேர்மன், மற்றும் இலங்கையிலிருந்தும் பல்வேறு அரசியல் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். பிரதம பேச்சாளர்களாக தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி அவர்கள் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலமும் சமஷ்டி தீர்வும் எனும் தலைப்பிலும் அரசியல் ஆய்வாளர் வி.சிவலிங்கம் அவர்கள் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு குறித்த இன்றைய அவசியம் பற்றியும், அரசியல் ஆய்வாளர் செயத் பஷீர் அவர்கள் வட கிழக்கில் முஸ்லீம் மக்கள் எதிர் கொள்ளும் நெருக்கடிகள் பற்றியும் தங்கள் கருத்துக்களை வழங்கினார்கள்.

இக் கருத்தரங்கில் தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்திற்கான அடிப்படை அம்சங்கள் என திரு. வீ.ஆனந்தசங்கரி அவர்களினால் முன் வைக்கப்பட்ட பத்து அம்சக் கோரிக்கைகளும் விவாதிக்கப்பட்டு ஏற்றுகொள்ளப்பட்டன. திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களினால் முன்வைக்கப்பட்ட பத்து அம்சக் கோரிக்கைகளும் பின்வருமாறு:

1. இன, மத ,மொழி, சாதிய, பால், வர்க்க பேதமற்ற சமத்துவ சமூதாயத்தை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு காணுதல்.
2. ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள், அடிப்படை குடியுரிமைகள் ஆகியவற்றிற்கு உத்தரவாதம் செய்தல்.
3. பாதுகாப்பு நிர்வாகம் உட்பட சகல துறைகளிலும் இன வீகிதாசாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படல்.
4. அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளைக் களைந்து தமிழ் பேசும் மக்களை ஒருமுகப்படுத்தி பெரும்பான்மை சமூகத்துடன் சமூக கலாச்சார உறவுகளைப் பலப்படுத்துதல்.
5. வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்களை உடனடியாக மீளக் குடியமர்த்தல். அத்துடன் கிழக்கில் சமூகங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள காணி மற்றும் அடிப்படைப் பிரச்சனைகளுக்கு சுமூகமாகக் தீர்வு காணுதல்.
6. நிரந்தர அரசியல் தீர்வுக்கான கட்டமைப்பில் வடக்கு, கிழக்கு வாழ் முஸ்லீம் மக்களின் அபிலாசைகளையும் பிரதிபலிக்கக் கூடியதான அரசியல் தீர்வைக் காணுதல்.
7. தொடரும் படுகொலைகள் நிறுத்தப்படுவதற்கு ஆவண செய்தல்.
8. சிறுவர்கள் கடத்தப்படுதலும் ஆயுதமயப்படுத்தப்படுதலும் நிறுத்தப்படவும், அவர்கள் பாதுகாப்பாக வாழவும் வகை செய்தல்.
9. தமிழ் பேசும் மக்கள் மீது விதிக்கப்படும் கப்பம், சட்ட விரோத வரி அறவிடுதல்கள் நிறுத்தப்படுவதற்கும் அது தொடர்பாக ஆட் கடத்தல்கள் மேற்கொள்ளப்படாதிருக்கவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல்.
10. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சுதந்திர ஊடகங்களையும் , ஊடகவியளார்களையும் பயங்கரவாதத்திற்கு எதிராகச் செயற்பட ஊக்குவித்தலின் மூலம் உண்மையான ஊடக சுதந்திரத்தை நிலை நாட்டுதல்.

இலங்கையர் ஜனநாயக முன்னணி

ஸ்ருட்கார்ட், ஜெர்மனி 13.11.06

படிப்பகம்